செ.வெ.எண். 121 நாள்.26.02.2018.

திருநெல்வேலி மாவட்டம் மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் தமிழக அரசின் பல்வேறு நலத்திட்ட உதவிகள் 47 நபர்களுக்கு ரூ. 17 லட்சம் மதிப்பில் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி,இ.ஆ.ப., அவர்கள் வழங்கினார்.

--------

திருநெல்வேலி மாவட்ட ஆட்சியர் அலுவலக வளர்ச்சிமன்ற கூட்ட அரங்கில், மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் இன்று (26.02.2018) நடைபெற்றது. பொதுமக்கள் ஏராளமானோர் கூட்டத்தில் கலந்து கொண்டு மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களிடம் கோரிக்கை மனுக்களை வழங்கினார்கள்.

இக்கூட்டத்தில், அனைவருக்கும் கல்வி இயக்கம் சார்பில் பெண்கல்வியின் முக்கியத்துவம் மற்றும் சுத்தம் சுகாதாரம் பற்றி மாணவர்களிடத்தில் விழிப்புணர்வு ஏற்படுத்தும் நோக்கத்தில் அனைத்து அரசு பள்ளி மாணவர்களுக்கும் பேச்சு,கட்டுரை மற்றும் ஓவியப் போட்டிகள் பள்ளி அளவிலும் நடத்தபட்டது. போட்டிகளில் வெற்றி பெற்ற துவக்க நிலை மாணவர்களுக்கு முதல் பரிசாக ரூ. 4000/-, இரண்டாம் பரிசாகரூ.3500/, மூன்றாம் பரிசாக ரூ.3000/- மற்றும் நடுநிலை வகுப்புமாணவர்களுக்கு முதல் பரிசாகரூ.5000/-, இரண்டாம் பரிசாக ரூ.4500/, மூன்றாம் பரிசாக ரூ.4000/-காசோலைகள் மற்றும் சான்றிதழ்கள் மொத்த 15 மாணவ மாணவியர்களுக்கு ரூ.61500 மதிப்பிலான காசோலையும், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையின் கீழ் திருநெல்வேலி வட்டத்தில் 13 நபர்களுக்கு தலா 3 சென்ட் வீதம் இலவச வீட்டுமனை பட்டாக்கள் ரூ12,67,500 மதிப்பிலும் தென்காசி வட்டத்தில் 6 பயனாளிகளுக்கு தலா 3 சென்ட் வீதம் இலவச வீட்டுமனை பட்டாக்களையும், சட்ட பட்டதாரிகள் ஊக்க உதவிதொகை 7 நபர்களுக்கு தலா 50 ஆயிரம் வீதம் 3.50 லட்சத்திற்காண காசோலையும், 4 பயனாளிகளுக்கு மாற்றுதிறனாளி உதவிதொகை ஆணையும் முன்னாள் படைவீரர் துறையின் மூலம் ஆயுட்கால மாதாந்திர உதவி தொகைக்காண ஆணை 2 நபர்களுக்கும் ஆக மொத்தம் 47 பயனாளிகளுக்கு 17 லட்சம் மதிப்பில் பல்வேறு நலத்திட்ட உதவிகளை மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. சந்தீப் நந்தூரி இ.ஆ.ப, அவர்கள் வழங்கினார்.

இன்று நடைபெற்ற மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் பொதுமக்களிடமிருந்து முதியோர் உதவித் தொகை, மாற்றுத்திறனாளிகள் உதவித் தொகை, முதிர்கன்னி உதவித் தொகை, விபத்து மரண உதவித் தொகை மற்றும் குடிநீர், சாலை வசதிகள் வேண்டி பல்வேறு மனுக்கள் பெறப்பட்டு, சம்மந்தப்பட்ட துறை அலுவலர்களிடம் கொடுக்கப்பட்டு, பரிசீலனை செய்து, உரிய நடவடிக்கை மேற்கொள்ள அலுவலர்களுக்கு உத்தரவிட்டார்.

இந்நிகழ்ச்சிகளில் மாவட்ட வருவாய் அலுவலர் திரு.பூ.முத்துராமலிங்கம், சமூக பாதுகாப்புத் திட்ட தனித்துணை ஆட்சியர் திரு.எஸ். சங்கரலிங்கம், திருநெல்வேலி கோட்டாட்சியர் திருமதி.மைதிலி, துணை ஆட்சியர்கள் (பயிற்சி) திருமதி.மயில், செல்வி.லெட்சுமி பிரியா உள்பட அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், திருநெல்வேலி.